தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் — இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்):— இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

ஈ. சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1981 (ஆ.இ.).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி, வி. சுவாமிநாதன்):— பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள்— தொடர்ச்சி.

(உ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, தமிழ்நாடு 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:- தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த)சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்):- இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஊ) நிதி ஒதுக்க (எண் 3)சட்டமுன்வடிவு, தமிழ்நாடு 1981.

(சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 46/1981).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:— தலைவர் அவர்களே "தமிழ்நாடு 981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/1981) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்" என்று மொழிகிறேன்.

---

*1981ம் ஆண்டு மே மாதம் 9-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.